## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 3-4 - ஒரு குறளாய்
## (திருக்காழிச் சீராமவிண்ணகரம்)

1178 * ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண் வேண்டி *
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி * ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த *
தாடாளன் தாளணைவீர்! ** தக்க கீர்த்தி
அருமறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும் *
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும் *
தெருவில் மலி விழா வளமும் சிறக்கும் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 1

1179 நான்முகன் நாள் மிகைத்[1] தருக்கை இருக்கு வாய்மை *
நலமிகு சீர் உரோமசனால் நவிற்றி[2] * நக்கன்
ஊன் முகமார் தலையோட்டூண் ஒழித்த எந்தை *
ஒளிமலர்ச் சேவடி அணைவீர்! ** உழுசேயோடச்
சூல் முகமார் வளையளைவாய் உகுத்த முத்தைத் *
தொல் குருகு சினை என்னச் சூழ்ந்தியங்க *
தேன் முகமார் கமல வயல் சேல் பாய் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 2

1180 வையணைந்த நுதிக்கோட்டு வராகம் ஒன்றாய் *
மண்ணெல்லாம் இடந்து எடுத்து மதங்கள் செய்து *
நெய்யணைந்த திகிரியினால் வாணன் திண் தோள் *
நேர்ந்தவன் தாளணைகிற்பீர்! ** நெய்தலோடு
மையணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும் *
மலர்க் குமுதம் வாய் என்றும் கடைசிமார்கள் *
செய்யணைந்து களை களையாதேறும் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 3

1181 பஞ்சிய மெல்லடிப் பின்னை திறத்து * முன்னாள்
பாய்விடைகள் ஏழடர்த்து பொன்னன்பைம்பூண் *
நெஞ்சிடந்து குருதியுக உகிர் வேலாண்ட *
நின்மலன் தாளணைகிற்பீர்! ** நீல மாலைத்
தஞ்சுடைய இருள் தழைப்பத் தரளம் ஆங்கே *
தண் மதியின் நிலாக் காட்டப் பவளம் தன்னால் *
செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 4

---
[1] மிகத்
[2] நவிற்று

1182 தெவ்வாய மற மன்னர் குருதி கொண்டு *
திருக்குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி செய்து *
வெவ்வாய மாகீண்டு வேழம் அட்ட *
விண்ணவர் கோன் தாளணைவீர்! ** விகிர்த மாதர்
அவ்வாய வாள் நெடுங்கண் குவளை காட்ட *
அரவிந்தம் முகம் காட்ட அருகே ஆம்பல் *
செவ்வாயின் திரள் காட்டும் வயல் சூழ் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 5

1183 பைங்கண் விறல் செம்முகத்து வாலி மாளப் *
படர் வனத்துக் கவந்தனொடும் படையார் திண் கை *
வெங்கண் விறல் விராதன் உக விற்குனித்த *
விண்ணவர் கோன் தாளணைவீர்! ** வெற்புப் போலும்
துங்கமுக மாளிகை மேல் ஆயங்கூறும் *
துடி இடையார் முகக் கமல்ச் சோதி தன்னால் *
திங்கள் முகம் பனி படைக்கும் அழகார் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 6

1184 பொருவில் வலம்புரி அரக்கன் முடிகள் பத்தும் *
புற்றுமறிந்தன போலப் புவி மேல் சிந்த *
செருவில் வலம்புரி சிலைக் கை மலைத் தோள் வேந்தன் *
திருவடி சேர்ந்து உய்கிற்பீர்! ** திரை நீர்த்தெள்கி[3]
மருவி வலம்புரி கைதைக் கழியூடாடி *
வயல் நண்ணி மழை தரு நீர் தவழ் கால் மன்னி *
தெருவில் வலம்புரி தரளம் ஈனும் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 7

1185 பட்டரவேரகல் அல்குல் பவளச் செவ்வாய் *
பணை நெடுந்தோள் பிணை நெடுங்கண் பாலாம் இன் சொல் *
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவில் *
மரம் கொணர்ந்தான் அடியணைவீர்! ** அணில்கள் தாவ
நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ *
நீள் பலவின் தாழ் சினையில் நெருங்கு * பீனத்
தெட்ட பழம் சிதைந்து மதுச் சொரியும் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 8

1186 பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் *
பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து *
கறை தங்கு வேல் தடங்கண் திருவை மார்பில் *
கலந்தவன் தாளணைகிற்பீர்! ** கழுநீர் கூடித்
துறை தங்கு கமலத்துத் துயின்று * கைதைத்

[3] நீத்தெள்கி

தோடாரும் பொதி சோற்றுச் சுண்ணம் நண்ணி *
சிறை வண்டு களி பாடும் வயல் சூழ் * காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 9

1187 * செங்கமலத்து அயன் அனைய மறையோர் * காழிச்
சீராம விண்ணகர் என்[4] செங்கண் மாலை *
அங்கமலத் தடவயல் சூழ் ஆலி நாடன் *
அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் **
கொங்கு மலர்க் குழலியர் வேள் மங்கை வேந்தன் *
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன *
சங்க முகத் தமிழ் மாலை பத்தும் வல்லார் *
தடங்கடல் சூழ் உலகுக்குத் தலைவர் தாமே 10

**அடிவரவு:** ஒருகுறள் நான்முகன் வை பஞ்சிய தெவ்வாய பைங்கண்
பொருவில் பட்டு பிறை செங்கமலத்து வந்து

[4] விண்ணகரின்